## சுருக்கம்

அறிவிப்புகள் – 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள 3,224 இடங்களில் கல்லூரி மாணவியரை சேர்க்க அனுமதி வழங்குதல் மற்றும் நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (பிந1(2))த்துறை**

**அரசாணை (நிலை) எண்.52** **நாள் 01.07.2022**
**சுபகிருது, ஆனி 17**
**திருவள்ளுவர் ஆண்டு 2053**

**படிக்கப்பட்டது:**

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடித எண்.பி2/3041/2022, நாள் 11.05.2022.

* * * * * *

**ஆணை:**

2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது "பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவியர் கல்லூரிகளில் அதிக அளவில் சேர்ந்து கல்வி பயில வேண்டும் என்பதற்காக, பள்ளி மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள 3,224 இடங்களில் கல்லூரி மாணவியர் தங்குவதற்கு அனுமதி அளிக்கப்படும். இதற்கென 48 இலட்சத்து 36 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் " என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பெறப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவில் 367 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருவதாகவும், இதில் ஒப்பளிக்கப்பட்ட 21325 மாணவியரில், 18101 மாணவியரே தற்போது விடுதிகளில் தங்கி பயின்று வருவதாகவும் மாணவியர் சேர்க்கையின்மை காரணமாக 3224 இடங்கள் காலியாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. இத்துறை சார்ந்த கல்லூரி விடுதிகளில் இடமின்மை காரணமாக மாணவியர் தனியார் விடுதிகளில் தங்கிப் பயிலும் சூழ்நிலை ஏற்படுவதாகவும், இதனால் பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவியர் நிதிச்சுமை காரணமாக

தங்களது கல்வியை இடையில் நிறுத்த நேரிடுவதாகவும் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

4. இந்நிலையில் கல்லூரிகளில் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவியரின் நலனை கருத்தில் கொண்டு 367 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி விடுதிகளில் காலியாக உள்ள 3224 இடங்களில் அனுமதிக்கப்பட்ட மாணவியரின் எண்ணிக்கைக்கு ஊறு விளைவிக்காத வகையில் தேவை மற்றும் இடவசதி அனைத்தையும் கருத்தில் கொண்டு கல்லூரி மாணவியரை சேர்க்க அனுமதியும், இதற்கென ஏற்படும் கூடுதல் செலவினத் தொகை ரூ.48,36,000/-க்கு நிதி ஒப்பளிப்பும் வழங்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் கோரியுள்ளார்.

5. இக்கூடுதல் செலவின விவரங்களை பின்வருமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அளித்துள்ளார்.

| வ.எண் | துறை | பள்ளி மாணவியர் விடுதிகளின் எண்ணிக்கை | ஒப்பளிக்கப் பட்ட மாணவியர் எண்ணிக்கை | அனுமதிக்கப் பட்ட மாணவியர் எண்ணிக்கை | பள்ளி விடுதிகளில் காலியாக உள்ள இடங்கள் | கல்லூரி மாணவியருக்கு ஆகும் கூடுதல் உணவு செலவினம் (ரூ) | கல்லூரி மாணவியருக்கு ஆகும் கூடுதல் பல்வகை செலவினம் (ரூ) | மொத்த கூடுதல் செலவினம் (ரூ) |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) = (6)x Rs.100 x 10 மாதம் | (8) = (6)x Rs.50 x 10 மாதம் | (9) =(7)+(8) |
| 1 | பிவ | 208 | 11660 | 9757 | 1903 | 1903000 | 951500 | 2854500 |
| 2 | மிபிவ | 113 | 6225 | 5709 | 516 | 516000 | 258000 | 774000 |
| 3 | சீம | 46 | 3440 | 2635 | 805 | 805000 | 402500 | 1207500 |
| மொத்தம் | | **367** | **21325** | **18101** | **3224** | **3224000** | **1612000** | **4836000** |

(பள்ளி விடுதி உணவுக் கட்டணம் ரூ.1,000/-, பல்வகை செலவினம் - ரூ.100/-
கல்லூரி விடுதி உணவுக் கட்டணம் ரூ.1,100/-, பல்வகை செலவினம் - ரூ.150/-)

6. இக்கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து அதனை ஏற்று, இத்துறை மூலம் செயல்படும் 367 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலப் பள்ளி மாணவியர் விடுதிகளில் காலியாக உள்ள 3224 இடங்களில் கல்லூரி மாணவியரை சேர்க்க அனுமதியும், இதற்கு தேவைப்படும் கூடுதல் செலவினம் ரூ.48,36,000/- (ரூபாய் நாற்பத்து எட்டு இலட்சத்து முப்பத்து ஆறாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6-ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

**I) பிற்படுத்தப்பட்டோர் நலன்**

உணவு செலவினம் (ரூ. 19,03,000/-)

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 277 - கல்வி- மாநிலச் செலவினங்கள் AA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் 367 - உணவளிக்கும்/ உணவுச் செலவுகள் 09- ஏனையவை"

**IFHRMS த.தொ.கு. 2225-03-277-AA-36709**

பல்வகை செலவினம் (ரூ. 9,51,500/-)

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 277 - கல்வி- மாநிலச் செலவினங்கள் AA - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் 324 - பொருள்களும் வழங்கலும் 01 - பொருள்களும் வழங்கலும்"

**IFHRMS த.தொ.கு. 2225-03-277-AA-32401**

**II) மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்**

உணவு செலவினம் (ரூ. 5,16,000/-)

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 277 - கல்வி- மாநிலச் செலவினங்கள் BC- மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் 367 - உணவளிக்கும்/ உணவுச் செலவுகள் 09 - ஏனையவை"

**IFHRMS த.தொ.கு. 2225-03-277-BC-36709**

பல்வகை செலவினம் (ரூ. 2,58,000/-)

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 03 - பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் 277 - கல்வி - மாநிலச் செலவினங்கள் BC - மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மாணவர் இல்லங்கள் 324 - பொருள்களும் வழங்கலும் 01 - பொருள்களும் வழங்கலும்"

**IFHRMS த.தொ.கு. 2225-03-277-BC-32401**

**III) சீர்மரபினர் நலன்**

உணவு செலவினம் (ரூ. 8,05,000/-)

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 80 - பொது 101

சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – மாநிலச் செலவினங்கள் AF - சீர்மரபினர் மாணவர் இல்லங்களும் உணவு இல்லங்களும் 367 – உணவளிக்கும்/ உணவுச் செலவுகள் 09 – ஏனையவை"

**IFHRMS த.தொ.கு. 2225–80–101–AF-36709**

<u>பல்வகை செலவினம் (ரூ. 4,02,500/–)</u>

"2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் 80 – பொது 101 சீர்மரபினர் மற்றும் ஏனைய நாடோடி இனத்தவர் நலன் – மாநிலச் செலவினங்கள் AF - சீர்மரபினர் மாணவர் இல்லங்களும் உணவு இல்லங்களும் 324 – பொருள்களும் வழங்கலும் 01 – பொருள்களும் வழங்கலும்"

**IFHRMS த.தொ.கு. 2225–80–101– AF-32401**

8. மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான நிதியொதுக்கம் ரூ.48,36,000/– 2022–2023 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2022–2023 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், பத்தி 6–ல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல் செலவினத்தை 2022–2023 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக்குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு/இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி,மிபி(ம)சி.ந/வ.செ.பொ.–I]த்துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவினை அதன் அலுவல் சார்பற்ற எண்.31554/நிதி(பி,மிபி(ம)சிந)/2022, நாள் 30.06.2022–ல் பெற்று வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.0563 (ஐந்நூற்று அறுபத்து மூன்று) (IFHRMS ASL No.2022060563)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்

ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18 (பெயரில்).

மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18 (பெயரில்).
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை– 1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள்.
சம்பந்தப்பட்ட மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.

நகல்:
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சீர்மரபினர் நலன், சென்னை–5.
மாண்புமிகு நிதி அமைச்சரின் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர்
மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை– 9.
நிதி (பி, மி.பி (ம) சி.ந/வ.செ.பொது I/II/வ.வ.1)த் துறை, சென்னை – 9.
இருப்புக் கோப்பு/உபரி.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

வா. சுதா
1/7/2022
**பிரிவு அலுவலர்**

01/07/22